கருத்துக்களை விளக்குகிற ஒரு தனித் திறன் பெற்றவர். நகைச்சுவையோடு யாருடைய கருத்தையும் சந்தித்து மறுக்கக்கூடியவர். மாறுபட்ட கொள்கை உடையவர்களையும் மதித்து நடத்தியவர். சட்டமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும், தன்னிடத்திலே வேற்றுமை இல்லாமல் பழகக்கூடிய அளவிற்கு, ஒரு சிறந்த பண்பாளராக விளங்கியவர். அவருடைய சிறப்புக்கு அடிப்படையாக அமைந்திருந்தது— அவருடைய நடுநிலை, ஒரு பொது நோக்கம், ஒரு நல்ல எண்ணம், மாற்றார்களிடத்திலேயும் காழ்ப்புணர்ச்சி கொள்ளாத ஒரு தன்மை, இவை காரணமாக அவர்கள் சிறந்து விளங்கினார்கள்.

முற்பகல் 9–40

கடந்த காலத்திலே அவர் சட்டமன்றப் பேரவையினுடைய தலைவராகப் பணியாற்றிய அந்தக் காலக்கட்டத்தில், எத்தனையோ மாறுபாடுகள் ஏற்பட்டபோதுகூட, அந்த மாறுபாடு நிகழ்வு முடிந்ததற்குப் பின்னர், அந்த மாறுபாடு கொண்டவர்களைக்கூட அழைத்து, அவர்களிடம் மிக நல்ல முறையிலே அன்போடு பழகி, அவர்களுடைய நட்பையும், அன்பையும் என்றைக்கும் இழக்காமல் இருந்தவர். எனவே, அப்படிப்பட்ட பண்பாளர் இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்றத்திற்கு வருகிறபோதே அறநிலையத் துறை அமைச்சராக வேண்டுமென்பதிலே, அளவு கடந்த ஓர் ஆர்வம் கொண்டிருந்தார்கள். அவருடைய பக்தி ஈடுபாடு, இறை வழிபாடு, அதன் காரணமாக அவருக்கு, தான் அமைச்சராக இருந்தால், இந்தப் பணியாற்ற வேண்டும் என்ற ஓர் ஆசை இருந்தது. அதை அவர் தெரிவித்தவுடனேயே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். அவ்வளவு ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்ட அந்தப் பணியை, மகிழ்ச்சியோடு நிறைவேற்ற அவர் காத்திருந்த காலத்தில் அவரை காலம் கொண்டு சென்றுவிட்டது.

அப்படிப்பட்ட ஓர் இயற்கையை நாம் என்றைக்கும் சந்திக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். அந்த நிலை ஏற்பட்டு, அவரைப் பிரிந்த காரணத்தாலே, நாம் அனைவரும் ஒரு பெரும் அதிர்ச்சிக்கு, துயரத்திற்கு ஆளாகி இருக்கிறோம். அவருடைய குடும்பத்தார் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவருடைய நண்பர்கள், உறவினர்கள், அவரோடு நாளும் பழகியவர்கள், அவர்கள் அனைவருக்கும் இந்த மன்றத்தின் சார்பாக, முன்னவர் என்ற முறையில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[2006 மே 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள், அரசியல் பாரம்பரியம் மிக்க குடும்பத்தைச் சார்ந்தவர். எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகக்கூடியவர். கொள்கைகள் வேறாக இருந்தாலும், ஆன்மீக வழிபாட்டை இறுதிவரை கடைபிடித்தவர். அன்னாரது மறைவிற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அறநிலையத் துறை அமைச்சர், இந்த மன்றத்தினுடைய முன்னாள் தலைவர், பெரியவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் மறைவுக்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியவர் பழனிவேல் ராஜன் அவர்கள், இந்த மன்றத்திற்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மூன்று முறை தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், 1996 ஆம் ஆண்டு இந்த மன்றத்தினுடைய சபாநாயகராக இருந்து அவர் ஆற்றிய பணி மகத்தானது.

இங்கே பேராசிரியர் குறிப்பிட்டதுபோல, அவர் எதிர்க்கட்சிகளிடத்திலேகூட அன்போடு, கண்டிப்போடு, கனிவோடு, பாசத்தோடு பழகுகின்ற ஒரு சிறந்த பண்பாளர். பண்பாளர் மட்டுமல்ல, அவர் இறை பக்தியிலே நம்பிக்கை கொண்டவர். திராவிட இயக்கத்திலே, இறை பக்தியிலே நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஒருசில பேரிலே, அவரும் ஒருவர். அதிலே மிகுந்த ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். எப்பொழுதும் தன் நெற்றியிலே விபூதியை அணிந்து காட்சியளிக்கக்கூடிய ஒரு சிறந்த பண்பாளர்.

அவருடைய தந்தையார் பி.டி. ராஜன் அவர்கள், இந்த நாட்டிற்கு ஆற்றிய பணிகள் ஏராளம். சபரிமலை ஐயப்பன் கோயில் இன்றைக்கு இருக்கிறது என்று சொன்னால், அதிலே மூல விக்கிரகம் தயாரித்துக் கொடுத்த பெருமை, பஞ்சலோக சிலை வைத்த பெருமை, திரு. பழனிவேல் ராஜன் அவர்களுடைய குடும்பத்தாருக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 9–45

அதேபோன்று, மதுரை மீனாட்சி அம்மன் கோயில்; அந்தக் கோயிலினுடைய முன்னேற்றத்திற்காகச் சிறப்பாகப் பணியாற்றியவர்; அரும்பாடுபட்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக, டாக்டர் கலைஞரிடத்திலே மாறாத அன்பு செலுத்தியவர். அவர் பதவியேற்றவுடனே, நான் தற்காலிக சபாநாயகராக இருந்த நேரத்தில், அந்த அறையிலே வந்து அமர்ந்தார்கள். எப்போதும் மெதுவாக பேசக்கூடிய பி.டி.ஆர். அவர்கள், உரத்த குரலிலே கேட்டார்கள், எங்கே, எங்கே? தலைவர் படம் எங்கே? இங்கே இருந்த படம் எங்கே என்று கேட்டார்கள். உடனே செயலாளரை அழைத்து இன்று மாலைக்குள்ளாக அந்தப் படத்தை இங்கே மாட்ட வேண்டுமென்று உரத்த குரலிலே ஆணையிட்டார்கள். தலைவர்மீது, அவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்த பி.டி.ஆர். அவர்கள், அன்பைச் செலுத்திய பி.டி.ஆர். அவர்கள், இந்த மன்றத்திலே இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, பல்வேறு கோயில்களுக்கெல்லாம் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட நேரத்தில், ஆண்டவன் நம்மிடத்திலேயிருந்து அவரைப் பிரித்துவிட்டான். அவரைப் பிரிந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய நண்பர்களுக்கும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் கொண்டுவந்த இரங்கல் தீர்மானத்தில், பாட்டாளி மக்கள் கட்சியையும் இணைத்துக் கொண்டு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே பதவியேற்று, அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழ்நாட்டிலே இருக்கிற கோயில்களில் திருப்பணிகளை எல்லாம் செய்வார்; அறநிலையத் துறை புத்துயிர் பெறும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த நமக்கும், இந்த மன்றத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் அவருடைய இழப்பு என்பது பேரிழப்பாகவே அமைந்திருக்கிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு இங்கே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவனின் கூற்றுக்கிணங்க, புகழ்மிக்க, பாரம்பரியம் மிக்க, மிகப் பெரிய குடும்பத்தில் பிறந்து, அந்தக் குடும்பத்தின் பெருமைக்கேற்ப அவரும் வாழ்ந்து மறைந்த பெருமைக்குரியவர். அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அவருடைய குடும்பம் தந்தை பெரியாரின் கொள்கையான சமூக நீதிக்கு வித்திட்ட குடும்பம், நீதிக் கட்சியின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட குடும்பம். அப்படிப்பட்ட பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்து, தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று, முத்தமிழ் அறிஞர் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் அவருடைய பணியைத் தொடங்கினாலும்கூட ஆன்மீகத்தில் தன்னுடைய நம்பிக்கையை வைத்து, முழு ஈடுபாடு உடையவராக வாழ்ந்து காட்டியவர். அவருடைய பணி திராவிடர் கழகத்தினுடைய, திராவிடர் கொள்கைக்குப் பெருமை சேர்க்கக்கூடியதாக இருக்கிற அதே வேளையில், ஆன்மீகத்திற்கு அவரால் ஈர்க்கப்பட்டவர்கள் பெருமையாகச் சொல்வார்கள்; அவரை ஒருமுறை குறிப்பிட்டார்கள் அவரைக் குறிப்பிடுகின்ற நேரத்தில், 'நாத்திகத் தோட்டத்தில் பிறந்த ஆத்திக மலர்' என்று குறிப்பிட்டார்கள். இப்படி இரண்டு கொள்கைகளையும் ஒருசேர தன்னகத்தே கொண்டு அதற்கேற்ப வாழ்பவர்கள் சிலரே. அப்படிப்பட்ட கொள்கைக்குப் பெருமை சேர்த்து வாழ்ந்தவர்.

அதுமட்டுமல்ல, சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர். அவர் பேரவைத் தலைவராக இருந்த நேரத்தில், நாங்கள் எல்லாம் உறுப்பினர்களாகப் பணியாற்றியபோது நடுநிலைக் கண் தவறாமல் பணியாற்றிய பெருமைக்குரியவர். சட்டமன்றத்திலே நாங்கள் எல்லாம் பேசுவதற்குக் கையை உயர்த்தினால், இல்லை என்று மறுத்து கையை அசைப்பார். இரண்டு நிமிடங்கள் கழித்து பெயரைச் சொல்லி அழைப்பார். அந்த அளவிற்கு வார்த்தையிலே சற்று கடுமை இருந்தாலும்கூட, அவருடைய நடவடிக்கை என்பது மகத்தானதாக எங்களாலே காண முடிந்தது.

*முற்பகல் 9–50*

அதேபோல, அவர் உயர்ந்த பண்பாளர், நட்புக்கு இலக்கணமானவர். காலையிலே என்னிடத்திலே ஒருவர் தொடர்புகொண்டு பேசியபோது,



நட்புக்கு இலக்கணமாக இருக்கக்கூடிய நண்பர்களைப் பார்ப்பது அரிது; அதிலே குறிப்பிடத்தக்கவர் அவர் என்று குறிப்பிட்டார்கள்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

என்று சொல்லக்கூடிய அந்த நட்புக்குப் பாத்திரமானவர். அவர் சமூகப் பணியில் ஆர்வம் கொண்டவர். மறைவுற்ற முதல் நாளன்று, தொடர் வண்டியில் புறப்படுகின்றார். உடல்நலக் குறைவு என்று அவர் சொன்ன நேரத்திலுங்கூட, எப்படியாவது செல்லவேண்டுமென்று, தடுத்தவர்களையெல்லாம் மீறிச் செல்கின்றார். செல்வதற்குக் காரணம், முன்னாள் அமைச்சராக இருந்த, மாண்புமிகு தா. கிருட்டிணன் அவர்களுடைய நினைவு நாள்; அதிலே பங்கேற்பதாகச் சொல்லியிருக்கின்றார். அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டளையை ஏற்று, "அன்று மாலை மதுரை, தேனி மாவட்டங்களின் அதிகாரிகளை அழைத்து வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கவேண்டும்; அதற்காக நான் செல்லவிருக்கின்றேன்; உடல்நலத்தைப் பற்றி நான் பொருட்படுத்தவில்லை; அந்தப் பணியைச் செய்ய வேண்டும்" என்று சொல்லி ஆர்வத்தோடு சென்றிருக்கின்றார்.

இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், தன்னுடைய இயக்கத்தைச் சார்ந்தவருக்கு நினைவு நாள். உடல்நலத்தைப் பாராமல், அதைக் குறிக்கோளாகக் கொண்டு, செல்ல வேண்டுமென்று பயணித்தவர். அதிகாரிகளைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு சென்றவர் என்று குறிப்பிடுவதிலே, அவர் இயக்கத்திற்கு, தன்னுடைய பணிக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார் என்பதை இதிலிருந்தே உணர முடிகிறது.

அவருடைய குடும்பம் பாரம்பரியமிக்க குடும்பம் என்று சொல்லுகின்ற நேரத்தில், அவருடைய அண்ணன் மதிப்பிற்குரிய கமலை தியாகராஜன் அவர்கள், தமிழிலே, தமிழ் இசையிலே ஆர்வம் மிக்கவர். அவருடைய குடும்பத்தோடு நட்பு கொண்டிருந்த காரணத்தால்தான், எங்களுடைய நிறுவனர், மருத்துவர் அய்யா அவர்கள்கூட அவரை அழைத்து பாராட்டி, பட்டங்களெல்லாம் கொடுத்தார்கள். சிறப்புச் சேர்த்தார்கள். ஆகவே, அப்படிப்பட்ட உயர்ந்த பண்புக்குரிய, பாரம்பரியமிக்க குடும்பத்தில் தோன்றி, அந்தக் குடும்பத்தினுடைய பெருமையை இறுதிவரை காத்தவர். தலைவர் கலைஞர் அவர்களுடைய புகழுக்குப் பெரிதும் பெருமை சேர்க்கக்கூடிய வகையில் பணியாற்றியவர்.

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 25

அப்படிப்பட்ட பெருமைக்குரிய மாமனிதர், இன்று நம்மிடையே இல்லாத இந்தத் துயர நேரத்தில், அவரைப் பிரிந்து வாடக்கூடிய அவரது குடும்பத்தாருக்கும், அவரை இழந்து சோதனையில் இருக்கின்ற முத்தமிழறிஞர், முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும், மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்பாளர், அய்யா பி.டி.ஆர். அவர்களுடைய மறைவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படி ஒரு துயரம் நேரும் என்று எவரும் எண்ணிப் பார்க்கவேயில்லை. மதுரை மக்கள் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. அய்யா பி.டி.ஆர். அவர்களைப் பற்றி ஏற்கெனவே இதே மன்றத்தில், பேரவைத் தலைவர் தேர்வு நடைபெற்றபோது எங்களுடைய குழுவின் தலைவர் தோழர் சி. கோவிந்தசாமி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் சிவபுண்ணியம் அவர்களும், நடுநிலை தவறாது அவர் ஆற்றிய பணியைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். அவருடைய மறைவு பற்றி தெரிந்தவுடனேயே, எங்களுடைய மாநிலக் குழுவின் செயலாளர் மரியாதைக்குரிய தோழர் என். வரதராஜன் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் மோகன் அவர்களும், நானும் எங்களுடைய கட்சியின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து, அவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தினோம்.

அவருடைய கனவு என்னவாகும் என்று நேற்றையதினம் 'இந்து' நாளேட்டில் ஒரு தனி கட்டுரை வெளிவந்திருக்கின்றது. பி.டி.ஆர். என்று சொன்னவுடனேயே, மதுரை மக்கள் கட்டுரையில் வந்துள்ளதைதான் நினைத்தார்கள். அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகத்திற்குட்பட்ட ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரியில் ஜிப்மர் என்ற பெயரில் இருப்பதைப்போல, மதுரைக்கும் ஓர் அமைப்பு வரும்; வரவேண்டுமென்று தொடர்ந்து அவர் முயற்சித்தார்.



2006 மே 25] [திரு. என். நன்மாறன்]

அதைப்போன்று, தகவல் தொழில்நுட்பப் பூங்கா—I.T. Park —அங்கு வருவது குறித்தும் தொடர்ந்து பேசியிருக்கின்றார். இதுபோன்ற விஷயங்களெல்லாம் என்னவாகுமென்ற வினா எழுந்திருக்கின்றது. இந்தக் கனவு நனவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கின்றது. அய்யா பி.டி.ஆர். அவர்கள், ஒரு செல்வந்தர்; சீமான்; அவருக்கு இருக்கின்ற செல்வத்தையே பயன்படுத்திக்கொண்டு சுகமாக இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய நட்பு அனைத்தும், கையறு நிலையில் உள்ள வறியவர்களிடத்தில்தான் கூடுதலாக இருந்தது. செல்வம் அதிகமாக இருந்தாலும்கூட,

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.'

என்கின்ற குறளுக்கேற்ப, அவருடைய வாழ்வை அமைத்துக்கொண்டார். அவர் பெயர் பழனிவேல் ராஜன் என்று இருந்தாலும், அவர் தந்தையார் பி.டி.ஆர். அவர்களுடைய பெயரால்தான் அவரையும் மக்கள் அழைத்து வந்தார்கள்.

முற்பகல் 9–55

மதுரை மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கனவுகள் நனவாக்கப்பட, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையைப் போன்று மதுரை மருத்துவமனையும் அனைத்து வசதிகளுடன் திகழ வேண்டும் என்கிற விருப்பமும், அதேபோன்று I.T. Park–ம், அதேபோன்று, அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனமும் மதுரையில் அமைய, அவருக்கு நாம் செலுத்துகிற அஞ்சலியாக, இந்த மன்றம் செயல்பட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரத் தலைவர்கள் தோழர் ஜோதிராம், விக்ரமன், வி. பிச்சை மற்றும் மாமன்றக் குழுத் தலைவர்கள் உட்பட அனைவரும் சேர்ந்து அவருடைய இரங்கலில் பங்கெடுத்தோம். என் சார்பிலும், மதுரை மக்களின் சார்பிலும், மீண்டும் ஒரு முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, வாழ்க அய்யா பி.டி.ஆர். புகழ் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு [illegible] வை. சிவபுண்ணியம் அவர்கள்.

V2', 31 /06. /06. 2.1
227070
சென்னை-600 009

[2006 மே 25

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்ந்த பண்பாளர், நீண்ட பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரரான எங்களது ஒப்பற்ற மரியாதைக்குரிய பி.டி.ஆர். அவர்களுடைய மறைவை, மிகப் பெரிய பேரிழப்பாகக் கருதுகிறோம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எங்களது சட்டமன்றக் குழுவின் சார்பிலும், அவருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக, 1996 ஆம் ஆண்டு முதல் இந்தப் பேரவையினுடைய தலைவராக மிகச் சிறப்பாகச் செயல்பட்டார்கள். அவர்கள் தலைவராகச் செயல்பட்ட காலத்தில் – இந்தப் பேரவையின் தலைவர்களாக வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்களாக, ஜாம்பவான்களாக விளங்கிய மரியாதைக்குரிய சிவசண்முகம் பிள்ளை, கிருஷ்ணா ராவ் போன்றவர்களை முன்னுதாரணப்படுத்தி, அவர்களைப் போலவே செயல்படவேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்தார்கள். இந்த விருப்பத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவராக, துணைத் தலைவராகச் செயலாற்றிய எங்களது அன்பிற்குரிய தோழர்கள் பழனிசாமி, திருப்பூர் சுப்பராயன் போன்றவர்கள் அவரது அறையிலே சந்தித்துப் பேசுகிறபோது, இந்தச் செய்தியை அய்யா பி.டி.ஆர். அவர்கள் வெளியிட்டார்கள். கிட்டத்தட்ட சிவசண்முகம் பிள்ளை, கிருஷ்ணா ராவ் அவர்களுடைய செயல்பாடுகளையொத்து, அவர்களைப் போலவே செயல்பட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும், இவர் பேரவைத் தலைவராக இருந்த காலத்தை சிறப்புக்குரிய பொற்காலமாக நான் கருதுகிறேன்.

அன்றையதினம், அவை உறுப்பினராக இருந்தது எங்களுக்கெல்லாம் பெருமைதரத்தக்க ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். அவர்கள் தலைமையின்கீழ் செயல்பட்டு, நல்ல ஆலோசனைகளை, நல்ல கருத்துகளை இந்த அவையிலே முன்வைப்பதற்கான ஏராளமான வாய்ப்புகளை, மிகப் பெரிய படிப்பினைகளைப் பெற்றோம். நான் அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, புதியவர்களாக இந்த அவைக்கு வந்த எங்களுக்கெல்லாம், ஆக்கமும் ஊக்கமும் தந்து, இந்த அவையிலே நல்ல கருத்துகளைப் பதிவு செய்வதற்கான அந்த வாய்ப்பினை அளித்தவர்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக நேர்மையாக, தயவு தாட்சண்யமின்றி நடுநிலையாகச் செயல்பட்டார் என்பதுதான் அவருடைய சிறப்பு. அது ஆளுங்கட்சியா, எதிர்க்கட்சியா என்றெல்லாம்



2006 மே 25] [திரு. வை. சிவபுண்ணியம்]

பாராமல், நடுநிலையோடு இந்த அவையை நடத்தினார். அன்றைச் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தவர்கள், அதை நன்ற அறிந்திருப்பார்கள். இன்றைக்குக்கூட அவர்கள் உறுப்பினர்களா இருக்கிறார்கள்.

எண்ணிக்கையைப்பற்றி பாராமல், அனைவரு ஜனநாயகப்பூர்வமாக, இந்த அவையிலே கருத்துகளைப் பதி செய்வதற்குரிய அந்த வாய்ப்புகளையெல்லாம் அளித்தவர், அய்ய பி.டி.ஆர். அவர்கள். அவருடைய அணுகுமுறை என்பது மிக சிறப்பிற்குரியவகையிலே இருக்கும். கறாராக இருப்பதைப் போன் தோற்றத்தை இந்த அவையிலே காட்டுவார்கள். சபாநாயகர் இருக்கையி அவர் அமர்ந்து, இந்தச் சபையை நடத்துகிற அந்தவிதமே அலாதிய இருக்கும். நாம் கையை உயர்த்தி அனுமதி கேட்டால், எடுத்த எடுப்பி இல்லையென்றுதான் அவர் மறுப்பார். என்னைப் போன்றவர்க திரும்பத் திரும்ப கேட்கிறபோது, இல்லையென்று மறுப்பதுபோ தோன்றும். மூன்றாவதாகக் கூப்பிட்டு விடுவார் என்று நம்பிக்கையோ நாங்கள் காத்திருப்போம். அப்படியெல்லாம் அந்த வாய்ப் அளித்ததனுடைய விளைவாக, பல கருத்துகள் இந்தச் சபையிலே பதி செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-

இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களாக இருக் மரியாதைக்குரிய திரு. துரைமுருகன் அவர்கள், திரு. பொன்முடி அவர்க திரு. கே.என். நேரு அவர்கள் எல்லாம் அமர்ந்து, அவரது அறையி அவரோடு நாங்கள் ஒருதினம் பேசிக் கொண்டிருக்கிறபோது, அவர்க வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள். சிவபுண்ணியம் என்ற பெ இருக்கிறது; நீங்களும், பக்தன் என்ற காரணத்தாலே அவர் உங்கள ஏமாற்றி அடிக்கடி வாய்ப்பைப் பெற்று வருகிறார்; அவர் நாத்திகவாதிய இருக்கிறார்; ஆகவே நீங்கள் அனுமதி தரக்கூடாது என்று வேடிக்கைய அவரிடத்திலே குறிப்பிட்டுச் சொல்வார்கள். அவர் திரும்பச் சொல்வா அவர் ஆத்திகரா, நாத்திகரா என்பது அல்ல எனக்குப் பிரச்சினை; அவ என் நண்பராக, ஒரு சீடராக நான் கருதுகிறேன் என்று சொன்ன அவர் எனக்கு விருப்பமானவர் என்று அடிக்கடி சொல்வார். அப்ப ஒரு சிறப்புக்குரியவருடைய மறைவை மிகப் பெரிய இழப்பாக நாங்க கருதுகிறோம்.

அவர் இந்தச் சபையினுடைய தலைவராக இருந்து, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு இருக்கிறார். அந்தச் சிறப்பை நாம் அனைவருமே பேணிக் காக்கவேண்டும் என்பதுதான் அவர்மீது நாம் ஏற்றுக்கொள்கிற சபதமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி, மறைந்த பி.டி.ஆர். அவர்களின் இழப்பு என்பது, நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பேரிழப்பாக இருக்கிறது என்றாலும், இப்படிப்பட்ட ஒரு சிறந்த தொண்டரை, ஒரு செயல் வீரரை இழந்திருப்பது மிகப் பெரிய வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே, அவரை இழந்து வாடுகின்ற அந்த இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆறுதலையும், மறைந்த தலைவர் பி.டி.ஆர். அவர்களுக்கு எங்களது புகழ் அஞ்சலியையும் செலுத்தி, நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக் கட்சியினுடைய தலைவராகவும், அமைச்சராகவும், முதலமைச்சர் பொறுப்பிலும் பணிபுரிந்த, செல்வமும் செல்வாக்கும் மிக்க குடும்பத்திலே தோன்றி, தமிழவேள் பி.டி. ராஜன் என்று பெயர் பெற்ற அந்தக் குடும்பத்திலே அவருடைய மகனாக மாண்புமிகு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தோன்றி, தன்னுடைய தந்தையின் வழியில் திராவிட இயக்கத்திலே தன்னை இணைத்துக்கொண்டவர். நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்றத்தினுடைய தலைவராகவும், ஒரு முறை சட்டமன்ற மேலவையினுடைய உறுப்பினராகவும் சிறப்பாகப் பணிபுரிந்தவர்.

அதேபோல, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினுடைய வளர்ச்சிக்கு எல்லாவகையிலும் துணை புரிந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகமே அவருடைய சேவையைப் பாராட்டி அவருக்கு டாக்டர் பட்டத்தையும் கடந்த காலத்திலே வழங்கி இருக்கிறது.

தற்போதைய அமைச்சரவையில், அறநிலையத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பை ஏற்று, நிச்சயமாக அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி இருப்பார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், 1971-வது ஆண்டு நடைபெற்ற தேர்தலில், அவர் இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், 1972–1973-வது ஆண்டில், இந்தச் சட்டமன்றத்தினுடைய



சார்பிலே அறிவிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவினுடைய தலைவராக அவர்கள் பணியாற்றினார்கள். அந்த ஆண்டு மதிப்பீட்டுக் குழு அறநிலையத் துறையினுடைய ஆய்வை மேற்கொண்டது. ஓராண்டுக் காலம் தமிழ்நாட்டினுடைய கோயில்களையெல்லாம் சுற்றிப் பார்த்து, நிருவாகத்தை எல்லாம் நேரடியாகத் தெரிந்து, அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கையைக் கொடுத்தார்கள். அந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டிருந்தது – மற்றவர்கள் எல்லாம் நினைப்பதைப்போல, அவர் ஒரு சிறந்த பக்தர், ஆன்மீகவாதி. அதிலே சந்தேகம் இல்லை. ஆனால் மூடநம்பிக்கைகள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலே தீவிரமான கருத்துகளைக் கொண்டவர். அன்றைக்கு அரசாங்கத்திற்கு அவர் கொடுத்த அறிக்கையில்— "கோயில்களிலே இருக்கக்கூடிய ஆண்டவன் முன்னிலையில் மக்கள் அத்தனை பேரும் சமம்; அதிலே ஜாதியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் கிடையாது; ஏழை, பணக்காரன் கிடையாது; பதவியிலே இருப்பவன், இல்லாதவன் கிடையாது; V.I.P., மிக முக்கியமான நபர், முக்கியம் அல்லாத நபர் என்பது கடவுளுக்கு முன்னாலே கிடையாது; அப்படி இருக்கும்போது, தமிழ்நாட்டில் உள்ள கோயில்களுக்கு சில முக்கியமானவர்கள், மிக முக்கியமானவர்கள் செல்லும்போது பூரணகும்ப மரியாதை கொடுப்பதும், அதேபோல பரிவட்டம் கட்டிப் பாராட்டுவதும் தேவையில்லாத காரியம்; ஆண்டவன் முன்னிலையிலே அனைவரும் சமம்; ஆகவே, அந்த முறைகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும்" என்று தன்னுடைய தீவிரமான கருத்தை, அன்றைக்குச் சட்டமன்றப் பேரவையில், மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு, அடுத்த மாதமே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கொஞ்ச நாள் அது நடைமுறையிலே இருந்தது. தற்போது அந்த நடைமுறை மறக்கப்பட்டு, பழைய நடைமுறைகளிலேயே இருந்து வருகின்றது. நிச்சயமாக அவர்கள் அறநிலையத் துறையினுடைய பொறுப்பை ஏற்றிருந்தால், அந்த நடைமுறை மட்டுமல்ல; இன்னும் பல சீர்திருத்தங்களைச் செய்திருப்பார்கள். தமிழ்நாட்டினுடைய திருக்கோயில்கள் புத்துயிர் பெற்றிருக்கும் என்பதில் நமக்கு எந்தச் சந்தேகமும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தவாதி.

முற்பகல் 10–05

அவர் பக்தராக இருந்தாலும்கூட, தமிழ் ஆர்வமும் அவரிடத்திலே இருந்தது. தமிழ்க் கலைகள் வளர வேண்டும், பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர்கள். அப்படிப்பட்ட ஒரு

[திரு. மு. கண்ணப்பன்] [2006 மே 25

நல்ல உள்ளம் கொண்டவரை, ஒரு பண்பாளரை, ஒரு சாதனையாளரை இன்றைக்கு நாம் இழந்திருக்கிறோம், நாடு இழந்திருக்கின்றது. ஆனால், அவருடைய நினைவு தமிழருடைய உள்ளங்கள் ஒவ்வொன்றிலும் என்றென்றும் குடியிருக்கும். மதுரையினுடைய நெடிய கோபுரங்களைப் பார்க்கின்ற நேரத்தில், நிச்சயமாக மாண்புமிகு திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்களுடைய நினைவு நம்மைச் சுற்றி இருந்து கொண்டேயிருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள்

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்பாளர் பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் நம்மையெல்லாம் விட்டு மறைந்துவிட்டாலும், அவருடைய நினைவுகள் நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அவர் மறைவால் பிரிந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாகவும், எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர் என் அருமை அண்ணன் திருமாவளவன் அவர்கள் சார்பாகவும், இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தி.மு.க.–வில் இருந்தபோதிலும், அவர் மதுரை மீனாட்சியின் பரம பக்தர்; மெய்யடியார். அந்த மீனாட்சியம்மன் கோயிலுக்கு அவரது தந்தை பிடி. ராஜன் அவர்கள் 1967–க்குமுன் நடத்தி வைத்த குடமுழுக்கு இந்தியா எங்கும் புகழ்பெற்றது. ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பின்னர், அதே கோயில் குடமுழுக்கு விழாக் குழு, பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையிலே அமைந்தது. அப்பணியை அவர் வெற்றிகரமாக, நிறைவு கட்டத்திற்குக் கொண்டுவந்த வேளையில், அவர் விழாக் குழு தலைவர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். வேறு ஒருவர் அமர்த்தப்பட்டபோதிலும், புதியவர் விழாவில் முன்நிறுத்தப்பட்டாலும், மதுரையைச் சார்ந்த, தமிழகத்தைச் சார்ந்த பொதுமக்கள் அனைவரும், இது பழனிவேல் ராஜன் திருப்பணி, இறைப்பணி என்று அவரைப் பாராட்டினார்கள்.

அவர் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்தவர். நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பிடி. ராஜன் அவர்களின் குடும்பத்தில் வந்த பழனிவேல் ராஜன் அவர்கள், அந்த மரபையொற்றி ஒடுக்கப்பட்ட மக்கள்மீது பற்று கொண்டவர். எளிதில்



2006 மே 25] [திரு. கு. செல்வம்]

அணுகக்கூடியவராகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளில் அக்கறை கொண்டவராகவும் இருந்தார். மதுரை மாநகர் வளர்ச்சி பெற்றுத் திகழ்வதற்கு அவரது பங்களிப்புகள் மிக அதிகம். குறிப்பாக, மதுரை நகரின் போக்குவரத்தைச் சீர்படுத்தும்விதமாக, பல்வேறு பாலங்கள் அவரால் கட்டப்பட்டன. தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை இந்து அறநிலையத் துறைக்குட்பட்ட கோவில்களில் மட்டுமின்றி, பிற இந்துக் கோயில்களிலும்கூட நடைமுறைப்படுத்த வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கோரி வந்தோம். திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் இருந்திருந்தால், எங்களுடைய கோரிக்கையை உணர்ந்து நிறைவேற்றித் தந்திருப்பார். ஆக, இந்த வேளையிலே மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவரான அவரை நினைவுகூரும் வகையில், சிறப்புச் செய்யும் வகையில்,. அவருடைய பெயரிலே ஒரு துறையை, ஒரு பிரிவுக்கு அவரது பெயரைச் சூட்ட வேண்டுமென்றும், அவரது பெயரில் அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தி, நீதிக் கட்சியின் மரபைக் காக்கும்விதமாக, ஒடுக்கப்பட்ட பிரிவின் கல்வி மேம்பாட்டுக்கு உதவ வழிவகை செய்ய வேண்டுமென்றும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகக் கேட்டு, அவரைச் சார்ந்த குடும்பத்தாருக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் இரங்கலைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமசந்திரன்.

**திரு. ட்டி. இராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பெரியவர் பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

அமைச்சர் பொறுப்பிலே திரு. பழனிவேல் ராஜன் அவர்களின் சேவையைப் பெரிதும் எதிர்பார்த்த வேளையில், அவரது திடீர் மறைவு, தமிழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை தேனி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையிலே பணியாற்றியவர். 1996–2001 வரை 5 ஆண்டுகள் சட்டப் பேரவைத் தலைவராக இருந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சமமாகப் பாவித்து. ஜனநாயக மரபுகளை இந்தப்

பேரவையிலே நிலைநாட்டியவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராகவும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவி காலியாக இருந்தபோது, குழுவிற்குத் தலைவராக இருந்து பல்வேறு பதவிகளையும் வகித்து, அப்பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர் தலைவர் பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள். அவருடைய இழப்பால் தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பண்பாளர் பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள், நீதிக் கட்சிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நீதிக் கட்சியினுடைய பெருந்தலைவர்களிலே ஒருவராக விளங்கியவர், அன்றைய சென்னை இராஜ்ஜியத்தினுடைய அமைச்சராக விளங்கிய பி.டி. ராஜன் அவர்களுடைய அருமை மைந்தர். தந்தை பெரியார் அவர்களும் W.P.A. சௌந்தரபாண்டியன் அவர்களும், பிடி. ராஜன் அவர்களும் இணைந்து 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடத்திய சுயமரியாதை மாநாட்டிலேதான், பெண்களுக்கு ஆண்களைப்போல், சொத்தில் சம உரிமை வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தைத்தான் கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு, அதாவது 60 ஆண்டுகளுக்குப் பிறகு, செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானத்தை, சட்டமாக இந்த அவையிலே கொண்டு வந்தோம். அப்படிப்பட்ட ஒளி மிகுந்த ஒரு பெருங்குடும்பத்தினுடைய துருவ நட்சத்திரமாக விளங்கியவர் பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் ஆவார்கள். என்பால் அவர்கள் கொண்டிருந்த அன்பைப்போலவே, எல்லோரிடத்திலும், பழகுவதற்கு இனியவராக, பண்பு மிக்கவராக, வயதில் சிறியவராக இருந்தாலும் அவர்களை மதிக்கின்ற மாண்புடையவராக அவர்கள் விளங்கினார்கள். இந்த அவையை அவர்கள் நடத்திய பாங்கினைப் பற்றி, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள், தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள்.

1997 ஆம் ஆண்டு – 20-3-1997-ல் "தினமணி" பத்திரிகை, தன்னுடைய தலையங்கத்தில் அவருடைய செயலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. "பழனிவேல் ராஜன் தனது நடுநிலை மனப்பாங்கினாலும், கண்ணியத்தாலும் அவையில் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற வழிவகுத்துள்ளார். கட்சிகடந்த முறையில் நடந்துகாட்டி, அவைத் தலைவர் ஆசனத்திற்கே மரியாதையைச் சேர்த்துள்ளார். ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதங்களிலும் சரி, அண்மையில் நடைபெற்ற வரவு–செலவுத் திட்ட விவாதங்களிலும் சரி, ஆளுங்கட்சியைவிட, எதிர்க்கட்சிகளுக்கே விவாதங்களில் கலந்துகொள்ள அதிக வாய்ப்பு அளித்தார். அதிலும் குறிப்பாக, தி.மு.க.-வின் நேச எதிர்க்கட்சியாக இருந்துவரும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தவிர்த்த மற்ற எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கி, எல்லாத் தரப்புகளின் பொது மரியாதைக்குரிய அவைத் தலைவராகப் பரிணமித்து வருகிறார். இதன்மூலம், சட்டப் பேரவை வரலாற்றில் முத்திரை பதித்த அவைத் தலைவர்களின் வரிசையில், பழனிவேல் ராஜனும் மரியாதைக்குரிய இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டார். அவையை நேரான பார்வையுடன் நடத்திய சிவசண்முகம் பிள்ளை, இதமாகவும், எல்லாத் தரப்பையும் அணைத்தபடியும் நடத்திய டாக்டர் கிருஷ்ணா ராவ், நடுநிலை தவறாத செல்லபாண்டியன் ஆகிய முப்பெரும் அவைத் தலைவர்களின் அரிய பண்புகள் நிறைந்த கலவையாக பழனிவேல் ராஜன் பணிபுரிகிறார்" என்று 'தினமணி' ஏடு, அவரைப்பற்றி ஒரு கருத்து விளக்கமே வழங்கியது. இப்படி எல்லோராலும் பாராட்டப்பட்டவர்.





*முற்பகல் 10–15*

இங்கே ம.தி.மு.க. சார்பில் உரையாற்றிய கண்ணப்பன் குறிப்பிட்டதைப்போல, பக்தர்களிடத்திலே பாசம் உடையவராக இருந்தாலும், ஆலயங்களிடத்திலே அதிக நம்பிக்கை உடையவராக இருந்தாலும், மதுரை மீனாட்சியம்மனை ஒரு நாளைக்கு நூறு தடவை பெயர் சொல்லி அழைத்துக் கொண்டிருந்தவர் என்றாலும்கூட, கோயில்களில் சமத்துவம் — பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழை என்கின்ற பாகுபாடு இருக்கக்கூடாது; அந்தஸ்து உடையவர், அந்தஸ்து குறைந்தவர் என்ற வேறுபாடு இருக்கக்கூடாது — என்பதிலே அக்கறை கொண்ட காரணத்தால்தான், கோயில்களுக்கு வருகின்றவர்களிலே V.I.P.–கள் என்ற முறையில், பட்டு பரிவட்டங்கள் கட்டக் கூடாது என்ற அந்தத் தீர்மானத்தை, கருத்தை ஆய்ந்து, இந்த அரசுக்கு அப்போது வழங்கினார். அப்படி வழங்கிய அந்தக் கருத்தை, இந்த அரசு அப்போது ஏற்றுக்கொண்டது என்றால், நான் முதலமைச்சராக அப்போது இருந்த காரணத்தால் அதை ஏற்றுக்கொண்டேன். அதைச் சொல்ல மறந்துவிட்டார் கண்ணப்பன் என்றாலும்கூட, அது அன்றைக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல ஆண்டுக் காலம் பழக்கத்திலே இருந்து, அவரே

குறிப்பிட்டதுபோல இடையிலே அந்த வழக்கம் மீண்டும் தலையெடுத்திருக்கிறது. இப்போது பழனிவேல் ராஜன் அவர்களுடைய நினைவாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற கருத்தை சில உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். அவருடைய நினைவாக நாம் செய்யக்கூடிய ஒரே காரியமாக, பல காரியங்களிலே சிறந்த காரியமாக, இனி V.I.P.-க்களுக்கு, ஆலயங்களில் இந்தப் பட்டுப் பரிவட்டம் கட்டுகின்ற மரியாதை கூடாது என்பதை பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்களுடைய நினைவாக நாம் தடுத்து நிறுத்துவோம்; அவற்றை இனி அனுமதிக்கமாட்டோம் என்பதை இன்று ஓர் உறுதியாக, பழனிவேல் ராஜன் அவர்களுடைய பெயரால் எடுத்துக்கொள்வோம் என்று கூறி, என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அவருடைய குடும்பத்தாருக்கு, அவரை நம்பி வாழ்ந்த நண்பர்களுக்கு, அவரிடத்திலே அன்பும், பாசமும் கொண்ட மதுரை மாவட்ட மக்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக தெரிவித்து, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, பேரவையின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித் துளிகள் அமைதிகாத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம், தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது)*

## 3. அறிவிப்பு

### செல்ஃபோன் இயக்கம் நிறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது Cell-phone-களை off செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு ஏற்கெனவே சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. இன்று, அவையில் Cell-phone ஒலிப்பதைக் கேட்டேன். எனவே, இனி பேரவைக்குள் வரும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் Cell-phone-களை off செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.





மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை, மீண்டும் நாளை *(26-05-2006)* காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை முற்பகல் 10-20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

227070